விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 113 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 28 புதன்கிழமை (10.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

காதலி உயிரிழந்த 50ஆவது நாளில்

## விபரீத முடிவெடுத்த காதலன் உயிரிழப்பு

### தெல்லிப்பழையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
காதலி உயிரிழந்த 50ஆவது நாளில் விபரீத முடிவெடுத்த காதலன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. 02


## சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கு அவசியம்

### பெப்ரல் அமைப்புக் கோரிக்கை

(கொழும்பு)
இடம்பெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு விரைவாக மேற்கொள்ள வேண்டும் என பெப்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டிஆராச்சி தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் 15

# பெரமுனவில் இருந்தே ஜனாதிபதி வேட்பாளர்

### மகிந்த அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)
பொதுஜன பெரமுனவில் இருந்தே ஜனாதிபதி வேட்பாளர் நிச்சயமாக களமிறக்கப்படுவார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளின் விடுமுறை அறிவிப்பு

(கொழும்பு)
அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளின் 2024ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணைக்கான முதற்கட்ட விடுமுறை அறிவிப்பை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.
இதன்படி, சிங்கள, தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான முதல் பாடசாலை 15

சுவிஸிலிருந்து யாழ். வந்தவர்

## குளியலறையில் விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)
சுவிஸ்லாந்திலிருந்து யாழ். வந்த ஒருவர் குளியலறையில் விழுந்ததில் உயிரிழந்துள்ளார். 15

இரு நாள் காய்ச்சல்

## 16 வயது மாணவி ஊரெழுவில் மரணம்

(யாழ்ப்பாணம்)
இரு நாள் காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பாடசாலை மாணவி ஒருவர் சிகிச்சை 15

## 779 கைதிகளுக்கு மன்னிப்பு

(கொழும்பு)
தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சிறைச்சாலை கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. 15

தமிழர்களின் வருங்காலத்துக்காக

## தமிழ் பொதுவேட்பாளர் அவசியமாகும் - விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் வருங்காலத்துக்காக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது அவசிய 16

அதிகமதிகமாக சுப பலன்களைத் தரும் பலமிகு
ஹந்தஹன
Handahana
ராசி சுப பலன்
(C-2281)
அதிர்ஷ்டமிக்க மில்லியன் வெற்றியாளர்கள்




அடுத்த மில்லியன் வெற்றியாளர் நீங்களா?

NLB தேசிய லொத்தர்
NLB ஹந்தஹன பொருத்தி உங்களது மில்லியன் பரிசுக் கனவை நனவாக்கிடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் சில மாதங்களில் ஆரம்பம்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்



வறுமை ஒழிப்பு வேலைத்திட்டத்தை இன்னும் சில மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அதன் மூலம் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு ஏழைக் குடும்பமும் வறுமையில் இருந்து மீளத் தயாராகும் என்றார்.

இந்த வருட இறுதியில் உருவாகும் திருப்புமுனையின் ஊடாக இந்நாட்டில் 220 இலட்சம் பேரின் வாழ்நாளை அதிகரிக்கும் வளர்ச்சியானது அனைவருக்கும் சுபிட்சத்தையும், அனைவருக்கும் அபிவிருத்தியையும், பொது மக்கள் சகாப்தத்தையும் ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியின் பலன்களை அனைவரும் பெறுவார்கள் என்றும் குருநாகல் ஹிரியால பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7,10)

# வீழ்ச்சிப் பாதையில் இருந்து நாடு மீட்கப்பட்டுள்ளது

## அமைச்சர் மனுஷ நாணயக்கார

நாம் நாட்டை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துள்ளோம். வீழ்ச்சிப்பாதையில் இருந்து நாடு இன்று மீட்டெடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. நாம் நாட்டை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்துள்ளோம். வீழ்ச்சிப்பாதையில் இருந்து நாடு இன்று மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்திக்கான கொள்கைத் திட்டங்களே எமது நோக்கமாகும். அதனாலேயே ஒரு சில நெருக்கடியான சந்தர்ப்பங்களில் கடினமான தீர்மானங்களை மேற்கொள்ள நேரிட்டது.

நாடு தொடர்பாக சிந்தித்தே நாம் அவ்வாறான தீர்மானங்களை மேற்கொண்டோம். மக்கள் இன்று அதனை புரிந்து கொண்டுள்ளனர்.

அதனை விடுத்து பேரணிகளை முன்னெடுத்தல் மற்றும் அரசியல் விவாதங்களை நடத்துவதன் ஊடாக எதனையும் சாதித்துவிட முடியாது. அதனூடாக மக்களின் ஆணையையும் பெற முடியாது இவ்வாறு மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ம-7,10)

## ஜனாதிபதித் தேர்தலுக்கான

# வேட்பாளர் வைப்பு தொகை அதிகரிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வைப்புத் தொகையை அதிகரிப்பதற்காக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போதைய, பொருளாதார, சமூக, அரசியல் பின்னணிகளுக்கு ஏற்ப பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றுக்கான தற்போதுள்ள வைப்புத்தொகை பண வரம்புகளை புதுப்பிப்பது தொடர்பில் அவர் குறித்த கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளரின் வைப்புத்தொகை 2.6 மில்லியன் ரூபாவாகவும் சுயேச்சை வேட்பாளர்களின் வைப்புத் தொகை 3.1 மில்லியன் ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் அரசியல் கட்சிகளில் இருந்து போட்டியிட்டால், அவர் 2.6 மில்லியன் ரூபாவை செலுத்த வேண்டும். சுயேச்சை வேட்பாளர் ஒருவர் 3.1 மில்லியன் ரூபாவை செலுத்தவேண்டும்.

அதேநேரம், பாராளுமன்ற தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரின் வைப்புத்தொகை 11,000 ரூபாவாகவும், சுயேச்சைக் குழு வேட்பாளரின் வைப்புத்தொகை 16,000 ரூபாவாகவும் திருத்தப்படும்.

மாகாணசபைத் தேர்தலில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரின் வைப்புத்தொகை 6,000 ரூபாவாகவும், சுயேச்சைக் குழுவின் வேட்பாளருக்கான வைப்புத்தொகை 11,000 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# பண்டிகைக் காலத்தில் மின் துண்டிப்பு இல்லை

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பராமரிப்பு பணிகளுக்காக மேற்கொள்ளப்படும் மின் துண்டிப்புகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பண்டிகைக்காலத்தில் எவ்வித இடையூறுமின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கு அவசியமான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

இதனிடையே, பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தேவையான எரிபொருளை அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதுமான எரிபொருள் கையிருப்பு நாட்டில் காணப்படுவதாக, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார். (ம-7,10)






# ஜனாதிபதி வேட்பாளரை உரிய நேரத்தில் அறிவிப்போம்

## ரஞ்சித் பண்டார எம்.பி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சரியான நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளரை மக்களுக்கு அறிவிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக மாறுபட்ட கருத்தினை தெரிவித்துவரும் நிலையில்

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே ரஞ்சித் பண்டார இதனை தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக பிரசன்ன ரணதுங்க முன்வைக்கும் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். அது கட்சியின் சார்பாக கூறப்பட்ட தீர்மானம் அல்ல.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பாக கட்சியின் நிறைவேற்று சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே நாம் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இல்லை என பலர் விமர்சிக்கின்றனர்.

ஆனால் அவ்வாறு அல்ல. நாம் சரியான நேரத்தில் எமது வேட்பாளரை களமிறக்குவோம். இன்று எம்மீது விமர்சனங்களை முன்வைக்கும் தரப்பினர் ஜனாதிபதியாகும் கனவுடன் வலம்வந்தாலும் அவர்களுக்கு மக்கள் ஆணை கிடைக்கப்போவதில்லை.

ஏனென்றால் பொதுஜன பெரமுனவின் வேட்பாளரே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவார். ஆட்சிக்கு வர நினைப்பவர்கள் தங்கள் கொள்கை திட்டங்களை முன் வைக்கவில்லை.

ஆனால் பொதுஜன பெரமுனவிடமே சிறந்த கொள்கை திட்டங்களும் வேலைத் திட்டங்களும் காணப்படுகின்றன இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7,10)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


## விபரீத...

தெல்லிப்பழையைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞரின் காதலியான தெல்லிப்பழை பகுதியை சேர்ந்த யுவதி ஒருவர் கடந்த 50 நாட்களுக்கு முன்னர் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இந்நிலையில் குறித்த இளைஞன் நேற்றையதினம் மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "ஏழையின் வயிற்றில் அடிக்காதே!"

# அரிசி விலையை குறைக்கக் கோரி போராட்டம்





(சாவகச்சேரி)

**அரசானது அரிசியின் விலையை நூறு ரூபாய்க்கு கீழே குறைக்க வேண்டும் என வலியுறுத்தி வடக்கு- கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பல்வேறு இடங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.**

வடக்கில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் "அரிசியின் விலையேற்றத்தால் பசியில் வாடுகிறோம், நிறுத்து நிறுத்து வளச் சுரண்டல்களை நிறுத்து, பொருளாதார சுமையைக் குறை, ஏழையின் வயிற்றில் அடிக்காதே, பட்டினிச் சாவு வேண்டாம், பிள்ளைகளை பசியால் வாட்டாதே" உள்ளிட்ட சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். (நி-5-30-285-315-316)

## பள்ளிவாசல்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

ரமழான் பண்டிகையை முன்னிட்டு இஸ்லாமிய பள்ளிவாசல்களில் பொலிஸாரால் சிறப்பு பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கு அமைவாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் திரிவேத இராணுவத்தின் பாதுகாப்பு படையினர் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

அதன் கீழ், நாடளாவிய ரீதியில் உள்ள 3,203 இஸ்லாமிய பள்ளிவாசல்களில் 2,453 இஸ்லாமிய பள்ளிவாசல்கள், மத வழிபாடுகள் நடைபெறும் இடங்களில் பாதுகாப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளது

மேலும் இந்த பாதுகாப்பிற்காக 5,580 பொலிஸ் அதிகாரிகள், 510 சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் 1,260 இராணுவ வீரர்கள் உட்பட 7,350 இற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார். (நி-5)

## மின்சார திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி - காஞ்சன

(கொழும்பு)



"மின்சார திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக" மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த சட்டமூலத்தை இந்த வார வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், இந்த மாத இறுதியில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த சட்டமூலத்தை, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தினத்தில் இருந்து 2 வாரங்களுக்கு அதனை சவாலுக்கு உட்படுத்த பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (நி-5)

## அதிவேக மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்ய அனுமதி

(கொழும்பு)

அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்ய இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, ஆகியோரின் அனுமதிக்கு அமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை இலங்கை பொலிஸாருக்கு அதிக திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்கும் அது தொடர்பான விசேட தேவைகளுக்கு பயன்படுத்துவது குறித்தும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (நி-5)

## மைத்திரிபால தாய்லாந்துக்கு விஜயம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாய்லாந்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அதன்படி அவர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.55 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு நாட்டிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளார். குறித்த பயணத்தில் 9 பேர் கொண்ட குழு மைத்திரிபால சிறிசேனவுடன் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கைதிகளை பார்வையிட அனுமதி

(கொழும்பு)

ரமழான் மற்றும் தமிழ்- சிங்கள புத்தாண்டு தினங்களை முன்னிட்டு சிறைச்சாலைக் கைதிகளை பார்வையிடுவதற்காக விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் ஊடக பேச்சாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு எதிர்வரும் 11 ஆம் திகதி ரமழான் பண்டிகையினை முன்னிட்டு இஸ்லாமிய மதக் கைதிகளுக்கு மாத்திரம் உறவினர்களை பார்வையிடுவதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறைச்சாலை கைதிகளுக்காக உறவினர்களினால் கொண்டுவரப்படும் இனிப்பு வகை, உணவு மற்றும் சுகாதார பொருட்களை தற்போதுள்ள சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக பாதுகாப்பு நடைமுறைகளுடன் வழங்குவதற்காக அனைத்து சிறைச்சாலைகளிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (நி-5)

## வரிச்சலுகை வழங்கிய போதும் மக்களுக்கு பலன்கள் கிடைக்கவில்லை

(கொழும்பு)

டொலரின் பெறுமதி 295 ரூபாய் வரை குறைந்திருந்தாலும் அதன் பலன் மக்களுக்கு கிடைக்கவில்லை என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

சில அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கம் வரிச்சலுகை வழங்கிய போதிலும் அதன் பலன்கள் மக்களுக்குக் கிடைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போதைய பண்டிகைக் காலத்தில் மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடைகளை அதிக விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

தரமற்ற பொருட்களும் இன்றைய காலத்தில் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## இலங்கையை கண்காணிக்க களமிறக்கப்படும் அமெரிக்க விமானம்

(கொழும்பு)

இலங்கையை சுற்றியுள்ள கடலில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு அமெரிக்கா உளவு விமானம் ஒன்றை வழங்கவுள்ளது.

Beech king Air 360er ரக புதிய விமானத்தை அமெரிக்கா வழங்கவுள்ளது

எதிர்வரும் ஆண்டு ஜூன் அல்லது ஜூலை மாதத்திற்குள் குறித்த விமானம் இலங்கைக்கு கொண்டுவரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வான்வழியாக கடல்சார் கண்காணிப்பை மேற்கொள்ள அமெரிக்க பாதுகாப்பு படைகளுக்கு சொந்தமான இடைமறிப்பு விமானம் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு வந்துள்ளது.

இவ்வாறு வந்திறங்கிய விமானம் சேலஞ்சர் 605 என்ற கண்காணிப்பு விமானமாகும். இது விமானப் படை விமானிகள் மற்றும் இலங்கை முப்படை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க பயன்படுத்தப்பட்டது.

மேலும், முப்படையைச் சேர்ந்த மேலும் பத்து அதிகாரிகள் அடுத்த சில மாதங்களில் பயிற்சிக்காக அமெரிக்கா செல்ல உள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'பதறிய' பஞ்சாப் 'சிதறிய' துடுப்பாட்டம்

## ஹைதராபாத்திடம் வீழ்ந்து ஏமாற்றம்

ஐ.பி.எல்., லீக் போட்டியில் பஞ்சாப் அணியின் முன்னணி வரிசைத் துடுப்பாட்டக்காரர்கள் பதற்றமான ஆட்டத்தை வெளிப்படுத்த, விக்கெட்டுகள் சரிந்தன. ஹைதராபாத் அணியிடம் கடைசி ஓவரில் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17ஆவது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன. நேற்று நடந்த லீக் போட்டியில் பஞ்சாப், ஹைதராபாத் அணிகள் மோதின.

**"லக்கி" ஹெட்**

ஹைதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா ஜோடி ஆரம்பம் வழங்கியது. முதல் ஓவரை வீசினார் ரபாடா. இதன் முதல் பந்தை எதிர்கொண்ட ஹெட், ஆட்டமிழந்ததாக பஞ்சாப் வீரர்கள் முறையிட, நடுவர் மறுத்தார். "ரீப்ளேயில்" பந்து துடுப்பில் பட்டது தெளிவாகத் தெரிந்தது. அணித் தலைவர் ஷிகர் தவான் முறையீடு செய்யாமல் விட்டதால் ஹெட் "தலை" தப்பியது. வாய்ப்பை பயன்படுத்திய ஹெட், ரபாடா வீசிய போட்டியின் மூன்றாவது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி அடித்து அசத்தினார்.

**அர்ஷ்தீப் அபாரம்**

நான்காவது ஓவரை வீசிய அர்ஷ்தீப் சிங், வேகத்தில் மிரட்டினார். இரண்டாவது பந்தில் ஹெட்டை (21) அவுட்டாக்கினார். அடுத்த இரண்டாவது பந்தில் அபாயகரமான மார்க்ரமை "டக்" அவுட்டாக்க, சொந்தமண்ணில் பஞ்சாப் ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். சாம் கர்ரான் வீசிய 5ஆவது ஓவரில் சிக்சர், பவுண்டரி என விளாசினார் அபிஷேக் சர்மா (16). துரதிர்ஷ்டவசமாக இவர் கடைசி பந்தில் ஆட்டமிழந்தார்.

ஹர்ஷல் படேல் பந்தில் ராகுல் திரிபாதி (11) ஆட்டமிழந்தார். பின் கிளாசன், நிதிஷ் குமார் இணைந்தனர். ஹர்பிரீத் பிரார் வீசிய 11ஆவது ஓவரில் நிதிஷ், தலா ஒரு பவுண்டரி, சிக்சர் அடிக்க, 15 ஓட்டங்கள் கிடைத்தன. அடுத்து வந்த ரபாடா, கர்ரான் பந்துகளிலும் இவர் சிக்சர் அடித்தார்.

ஹைதராபாத் அணி 13 ஓவர்களில் 100/4 ஓட்டங்களை எட்டியது. மறுபக்கம் கிளாசன் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

**நிதிஷ் அரைசதம்**

ஹர்பிரீத் வீசிய 15ஆவது ஓவரில் ஓட்ட மழை பொழிந்தார் நிதிஷ். 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 22 ஓட்டங்களைக் குவித்தார். இவர் 32ஆவது பந்தில் ஐ.பி.எல்., அரங்கின் முதல் அரைச்சதம் கடந்தார். இவருக்கு "கம்பெனி" கொடுத்த அப்துல் சமத், ஹர்ஷல் படேல் ஓவரில் இரு பவுண்டரி விளாசினார். இந்த ஜோடி 19 பந்துகளில் 50 ஓட்டங்கள் சேர்த்தது.

தனது மூன்றாவது ஓவரை வீசிய அர்ஷ்தீப், ஹைதராபாத் அணிக்கு மீண்டும் "இரட்டை அடி" கொடுத்தார். மூன்றாவது பந்தில் அப்துல் சமத்தை (25) அவுட்டாக்கி அனுப்பி வைத்தார். ஐந்தாவது பந்தில் நிதிஷ் குமாரை (64) அவுட்டாக்கினார். கம்மின்ஸ் (3), புவனேஷ்வர் (6) நிலைக்கவில்லை.




20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு பேர்ஸ்டோவ் (0), தவான் (14), பிரப்சிம்ரன் (4) "ஷாக்" கொடுத்தனர். கர்ரான் (29), சிக்கந்தர் ராஜா (28), ஜிதேஷ் (19) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, பஞ்சாப்தோல்வி உறுதியானது.

கடைசி ஓவரில் பஞ்சாப் வெற்றிக்கு 29 ஓட்டங்கள் தேவைப் பட்டன. உனத்கட் வீசிய இந்த ஓவரில் 26 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன. பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

(ம-7,10)




# நம்பிக்கை தந்த கப்டன்

## யஷ் தாகூர் பெருமிதம்

"குஜராத் அணிக்கு எதிராக சிறப்பாக செயற்பட அணித் தலைவர் ராகுல் கொடுத்த நம்பிக்கை முக்கிய காரணம்," என, லக்னோவின் யாஷ் தாகூர் தெரிவித்தார்.

லக்னோவில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் லக்னோ அணி (163/5, 20 ஓவர்) 33 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை (130/10, 18.5 ஓவர்) வீழ்த்தியது. இதன்மூலம் ஐ.பி.எல்., அரங்கில் குஜராத் அணிக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்தது லக்னோ. தவிர இப்போட்டியில் வேகத்தில் மிரட்டிய யாஷ் தாகூர் 3.5 ஓவர்களில் 30 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட் கைப்பற்றி வெற்றிக்கு உதவினார். இதன்மூலம் ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு வேகப்பந்து வீச் சாளர் மயங்க் யாதவ் காயத் தால் ஒரு ஓவர் மட்டும் பந்து வீசினார்.



இதுகுறித்து யாஷ் தாகூர் கூறுகையில், "மயங்க் யாதவ் சிறந்த வேகப்பந்துவீச்சாளர். இவர் காயத்தால் விலகிய பின், அணித் தலைவர் ராகுல் "இது உன்னுடைய நாள். அணிக்கு வெற்றி தேடித்தர முயற்சிக்கவும். உன் மீது நம்பிக்கை வைத்து விளையாடவும்" என ஊக்கப்படுத்தினார். இது போட்டியில் சாதிக்க உதவியது. என் மீதான எதிர்பார்ப்பை நெருக்கடியாக கருதவில்லை. இது போன்ற எதிர்பார்ப்பு மகிழ்ச்சியாக உள்ளது. என்றார்.

(ம-7,10)

# கிண்ணம் வென்றது இங்கிலாந்து




மூன்றாவது ஒருநாள் போட்டியில் அசத்திய நியூசிலாந்து பெண்கள் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணி 2-1 என தொடரை கைப்பற்றி கிண்ணம் வென்றது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து பெண்கள் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது.

முதலிரண்டு போட்டியில் வென்ற இங்கிலாந்து 2-0 என ஏற்கெனவே தொடரை கைப்பற்றியது.

இந்நிலையில் ஹமில்டனில் மூன்றாவது போட்டி நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு அமி ஜோன்ஸ் (50), சார்லி டீன் (38), அணித் தலைவர் ஹீதர் நைட் (31) கைகொடுத்தனர். 46.3 ஓவர்களில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் ஜெஸ் கெர், ஹன்னா ரோவ் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு சுசீ பேட்ஸ் (6) ஏமாற்றினார். அமேலியா கெர் (31) ஆறுதல் கொடுத்தார். சார்லி டீன் பந்தை சிக்சருக்கு அனுப்பிய அணித் தலைவர் சோபி டெவின் சதமடித்து வெற்றியை உறுதி செய்தார்.

39 ஓவர்களில் நியூசிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

டெவின் (100), மேடி கிரீன் (38) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகி விருதை நியூசிலாந்தின் சோபி டெவின் வென்றார். தொடர் நாயகி விருதை இங்கிலாந்தின் அமி ஜோன்ஸ் (190 ஓட்.,) கைப்பற்றினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு விளையாட்டுகளின் பெயர்களில் மாற்றம்

(கொழும்பு)

புத்தாண்டு கொண்டாட்டங்களில் இதுவரை நடத்தப்பட்டு வந்த இரண்டு நாட்டுப்புற விளையாட்டுகளின் பெயர்கள் இந்த ஆண்டு முதல் மாற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கண் கட்டி பானை உடைத்தல் அதிஷ்ட பானை உடைத்தல் என்றும், பார்வையற்றவர்களுக்கு உணவளிப்பது நண்பருக்கு உணவு ஊட்டுவது என்றும் மாற்றப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் குறித்து சமூகத்தில் கருத்தியல் மாற்றத்தை ஏற்படுத்தவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் தெரிவித்தார். (நி-5)

## யாழ். இந்திய துணைத்தூதரகத்தால் முஸ்லீம் குடும்பங்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

புனித ரமழானை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் முஸ்லிம் குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கலாச்சார மத்திய நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 150 முஸ்லிம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதன்போது யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் தூதரக அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (நி-5-33)

# பிரமந்தனாறு படுகொலை; நீதிகோரி போராட்டம்

(கண்டாவளை)

**கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் கடந்த 04 ஆம் திகதி இளம் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தி படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி கோரியும் போதைப்பொருள் பாவனையை தடுக்கக் கோரியும் பிரதேச மக்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரியிடமும் மகஜர் ஒன்று கையடளிக்கப்பட்டுள்ளது.**



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர்கள் உட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் கடந்த நான்காம் திகதி குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின் போது இளம் குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட இவருக்கு நீதியான விசாரணை மேற்கொள்ளுமாறு கோரியும் தங்களுடைய பிரதேசத்திலே இடம்பெறுகின்ற போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்புகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது

700 இற்கும் மேற்பட்டோர் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டதுடன் தர்மபுரம் இலக்கம் 1 பாடசாலைக்கு அண்மித்த பகுதியிலிருந்து பேரணியாக சுலோக அட்டைகளையும் உயிரிழந்தவரின் பதாகைகளையும் தாங்கியவாறு பேரணியாக நகர்ந்து சென்று தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தனது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்துள்ளனர். (நி-5-315)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சங்கீத பாட ஆசிரியரான திருமதி.தாட்சாயணி கணேசநாதன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்.

**பரராஜசிங்கம் ஸ்ரீபாலச்சந்திரன்**

அவர்கள் 09.04.2024 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (19060)

கல்லூரிச் சமூகம், யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## வேலையாட்கள் தேவை

வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்தில் பிரேதம் எரிப்பதற்கான வேலையாட்கள் தேவை. இதற்கு விருப்பமுடையவர்கள் மயான அபிவிருத்திச்சங்கத் தினருடன் தொடர்பு கொள்ளவும்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 077 438 6508 | 077 151 0464 | 077 271 9829 |


# இராசிபலன்

10.04.2024
பங்குனி 28, புதன்கிழமை
துதியை முன்னிரவு 8.34 மணிவரை

அச்சுவினி முற்பகல் 7.20 மணிவரை
சுபநேரம் 4.36- 6.06 மணிவரை
இராகுகாலம்-12.06- 1.36 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரம்

வளவன்

**மேஷம்:** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடிவரலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும், உற்சாகமான நாள்.

**துலாம்:** நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம் பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனையைக் கூறுவார், பெற்றோர் மீதான பகை கூடும் பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்:** சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, வேலைச் சுமை கூடும்.

**சிம்மம்:** மறைமுக போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மிதியும் தொடர்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்:** வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் செய்ய போட்ட திட்டங்கள் கைகூடும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஒருவகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வழியில் அன்புத்தொல்லைகள் ஏற்படலாம்.

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பார்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

செல்வதற்கு செல்வம் தேவை இல்லை உள்ளம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினைகளை ஜே.வி.பி புரிந்து வைத்துள்ளது

## யாழில் சந்திரசேகர் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்களின் தேசிய பிரச்சினைகள் தொடர்பில் எமக்கு கரிசனை அதிகம்.

தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் திடமாக உள்ளோம் என தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினையை இனம் கண்டுள்ளோம்.

அதற்கான தீர்வினை பரிந்துரை செய்யவுள்ளோம். தீர்வு என்ன என்பதை மிக விரைவில் தெரியப்படுத்துவோம். தற்போது அது தொடர்பில் சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி வருகிறோம். அடுத்து தமிழ் கட்சிகளோடு பேசவுள்ளோம்.

தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது அவர்களுடையது. ஆனால் பொதுவான நிலைப்பாடு மாற்றம் வேண்டும் என்பதாகவே உள்ளது.

கடந்த 75 ஆண்டுகளாக நீலம், பச்சை என மாறி மாறி ஆட்சிக்கு வந்து மக்களுக்கு வாய்க்கரிசி போட்டுள்ளார்கள்.

எனவே மாற்றம் வேண்டும் என பெரும்பாலான மக்கள் சிந்திக்கின்றனர்.

மாற்றத்தையே ஒட்டுமொத்த இலங்கை மக்களும் விரும்புகின்றனர்.

ஆகவே தமிழ் மக்கள் சிந்தித்து செயற்படுவார்கள் என நம்புகிறோம் என அவர் தெரிவித்தார். (நி-5-33)

## குரோதி வருஷப்பிறப்பு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்த சுவாமி கோவிலில் குரோதி வருஷப்பிறப்பினை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சாயரட்சை பூசை, குரோதி வருஷப் பிறப்பு நேரமாகிய இரவு 8.15 மணிக்கு விஷேட பூசை இடம்பெற்று முருகப் பெருமான் திருவீதி வலம் வரும் காட்சி இடம்பெறவுள்ளது. (நி-5)



மயிலிட்டி முதன்மை மருத்துவமனையின் புனர்நிர்மாண வேலைகள் அண்மையில் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனகஹேரத் தலைமையில் நடைபெற்றது.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இடைக்காட்டுப்பதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4. மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 120 | 200 | 130-160 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 180 | 145 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 280 | 200 | 150-200 |
| தக்காளி | 140 | 100 | 120 | 150 | 60-80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 150 | 200 | 100-130 |
| கோவா | 180 | 160 | 200 | 200 | 200 |
| கரட் | 300 | 350 | 400 | 400 | 320 |
| பூசணி | 160 | 130 | 160 | 150 | 80-100 |
| புடோல் | 120 | 200 | 150 | 100 | 100 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 160 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 320 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 600 | 380 | 400 | 700 | 320 |
| பாகற்காய் | 250 | 300 | 300 | 250 | 250 |
| வெண்டக்காய் | 80 | 140 | 150 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 150 | 150 | -- |
| பயற்றங்காய் | 120 | 180 | 120 | 120 | 100-130 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 300 | 200 |
| பீற்றூட் | 120 | 200 | 200 | 250 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 80 | 700 | 800 | 300-550 |
| போஞ்சி | 300 | 260 | 250 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 160 | 160 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 100 | 100 | 40-60 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 450 | 350-510 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 80 | 80-120 | 50-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | -- | 200 | 200 | 400 | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 | 70 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | [illegible] | 100 | [illegible] | 80 |

# எழுதுமட்டுவாழ் சந்தியில் விபத்து காயமடைந்தவர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சொகுசு பேருந்துடன் மகேந்திரா வாகனம் நேருக்கு நேர் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது சொகுசு பேருந்துடன் மோதிய மகேந்திரா வாகனத்தை அதன் பின்பாக வந்த தனியார் பேருந்தும் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் மகேந்திரா வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-30)



யா/போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 2024 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது. (படம்: சுவேதன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பட்டாசு வெடிப்பதால் பாதிப்படையும் கண்கள்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

**பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிப்பதால் 17 சதவீதம் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என தேசிய கண் வைத்தியசாலை நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

அத்துடன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் கண் வைத்தியசாலை நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

இதனைத் தவிர்க்கச் சிறுவர்கள் எப்போதும் பெரியவர்களின் மேற்பார்வையில் பட்டாசு வெடிக்க வேண்டும் என்றும், தீயற்றக்கூடிய பொருட்கள் உள்ள இடங்களில் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்றும் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

பட்டாசு வெடிக்கும் போது தீ காயங்கள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுமாறும், தீக்காயங்களுக்கு கை மருந்து பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (நி-5)




பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்

சிதம்பரநாதன் சிவகுமார்

B.A (Hons) Dip.in.Ed
M.A (Hons) 2nd Lower (தமிழ்)

யாழ்.பல்கலைக்கழக 38 ஆவது பட்டமளிப்பு விழாவில் M.A (Hons) பட்டம் பெற்றதையிட்டும் மேலும் பல சிறப்புக்கள் பெறவும் வாழ்த்துகிறோம்.

(C-0092)

வாழ்த்துவோர்: யா/வீமன்காமம் மகாவித்தியாலயம், ஆசிரியர் நலன்புரிக்கழகம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1979 - இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா: 38
உயரம்:5' 4"
தகைமை/தொழில்: A/L. லண்டன்(PR)
விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு:குணமுள்ள பெண்
தொ.இ: B/14430

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி.பா: 40
உயரம் :5' 9"
தகைமை/தொழில்:MBBS, Doctor
எதிர்பார்ப்பு:Doctor. பட்டதாரி
தொ.இ: B/14431

பிறப்பு:-1987-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
கி.பா: 19 1/4
உயரம்:5' 5"
தகைமை/தொழில்:Computer Diploma, postmaster
எதிர்பார்ப்பு:கொழும்பு/ யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள்
தொ.இ: B/14433

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா-52
உயரம்:5' 9"
தகைமை/தொழில்:- மில் Owner
எதிர்பார்ப்பு:A/L படித்தவர்
தொ.இல: B/14436

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு -1993- இந்து
நட்சத்திரம்:அனுஷம்
கி.பா:28 உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: College, Teacher
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகத்தர்/ வெளிநாடு
தொ.இ: G/14440

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா: -
உயரம்: 5'
தகைமை/தொழில்:IT Finance& Techno logy, Marketing(Aus)
எதிர்பார்ப்பு:படித்த உத்தியோகம் உள்ள மணமகன்
தொ.இ: G/14443

பிறப்பு -1994- இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: -
உயரம்:5' 2"
தகைமை/தொழில்: HNDA. முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு:அரச வேலை
தொ.இ: G/14445

பிறப்பு -1996-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா: 01
உயரம் : 5' 6"
தகைமை/தொழில்: Bsc (IT), IT Businees Analyst
எதிர்பார்ப்பு:Professionals, Graduates
தொ.இ: G/14448

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வியாபார முகாமைத்துவமாணிப் பட்டப்படிப்பு - 2022/2023**
Bachelor of Business Management Degree Programme - 2022/2023

**புதிய அனுமதிக்கான விண்ணப்பம் - 2024 - 14 ஆம் அணி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

- க.பொ.த. (உ/த) பரீட்சை -2022 அல்லது அதற்கு முன்னர் எப்பாடப் பிரிவில் இருந்தாயினும் சித்தியடைந்திருப்பதுடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**முக்கிய குறிப்பு:** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் உள்வாரியாக பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1,000.00 இனை 05014215000121 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி https://www.codl.jfn.ac.lk/index.php/bbm-batch-xiv/ எனும் இணைப்பின் ஊடாக விண்ணப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 13.05.2024 (திங்கட்கிழமை) பின்னிரவு 11.59**
(விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்து அதனுடன் கொடுப்பனவுச் சீட்டின் மூலப்பிரதியினை (Original Slip) இணைத்து 17.05.2024 (வெள்ளிக்கிழமை) அல்லது அதற்கு முன்னர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் (Registered Post) மூலமாகவோ அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணிப் பட்டப்படிப்பு - 2022/2023 - 14 ஆம் அணி" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதிவுத்தபால் அனுப்ப வேண்டிய முகவரி: உதவிப்பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களை 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணினூடாக அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுகொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C-0098)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
# ஆதனப் பெயர்மாற்றம்
## 2/7, கலட்டி ஒழுங்கை, வட்டாரம்-01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01 கலட்டி ஒழுங்கையிலுள்ள இல 2/7 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் பாலகிருஷ்ணர் சோமசுந்தரம் பெண் சித்திரா என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஒரு பகுதியினை இராமலிங்கம் சந்திரகுமார் மகள் நிர்மலி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15678/27.02.1988 ஆம் இலக்க உறுதியால் மயில்வாகனம் பாலசிங்கம் ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த ஆதனத்தின் மற்றய பகுதியினை சந்திரகுமார் சஞ்சீவிராசன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15775/20.07.1988 ஆம் இலக்க உறுதியால் குறித்த மயில்வாகனம் பாலசிங்கம் ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப்பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த ஸ்கந்தராஜ் பெண் நிர்மலி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு S.P.சிவஞானம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1249/29.11.2008ஆம் இலக்க உறுதியால் குறித்த சந்திரகுமார் சஞ்சீவராஜன் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த விக்னேஸ்வரன் ஸ்கந்தராஜீம் பெண் நிர்மலியும் ஆகியவர்கள் தங்களில் 2ம் பேருக்கு குறித்த 15678 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதியால் அவரின் பேரன் மயில்வாகனம் பாலசிங்கம் தனது சீவிய உரித்துக்கமைவாக குறித்த ஆதனத்தை நன்கொடை அளித்திருந்தார் என்றும் குறித்த பாலசிங்கம் காலமானதால் குறித்த ஆதனம் நிர்மலியின் சுயாதீன ஆதனமாகிவிட்டதென்றும் தங்களுக்கிடையே திருமணம் நடைபெறவிருப்பதால் குறித்த ஆதனத்தை தமது திருமணத்திலிருந்து தமது சீதன ஆதனமாக கருதப்படவேண்டும் என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு S.P.சிவஞானம் முகதாவில் 1250/29.11.2008 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்துகை (சீதனம்) உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த விக்னேஸ்வரன் ஸ்கந்தராஜ் பெண் நிர்மலி ஆகியவர் முழு ஆதனத்துக்கும் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.


இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விக்னேஸ்வரன் ஸ்கந்தராஜ் பெண் நிர்மலி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(398)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ உளவு செயற்கைக்கோளை வெற்றிகரமாக செலுத்திய தென்கொரியா



(சியோல்)
அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து இரண்டாவது இராணுவ உளவு செயற்கைக்கோளை தென்கொரியா ஏவி பரிசோதனை செய்ததில் வெற்றியடைந்துள்ளது.

குறித்த பரிசோதனையானது நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

கொரிய தீபகற்பத்தில் அமைந்த வடகொரியா மற்றும் தென்கொரியா இடையேயான பகைமைகள் உச்சம் தொட்டுள்ள சூழலில் தென்கொரியா இந்த பரிசோதனையை நடத்தியுள்ளது.

இதனை தென்கொரிய பாதுகாப்பு அமைச்சகமும் உறுதி செய்துள்ளதுடன் உளவு செயற்கைக்கோள் வட்டபாதைக்குள் நுழைந்த தோடு ரொக்கெட்டில் இருந்து பிரிந்த பின்னர் தரைப் பகுதியில் அமைந்த கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.


இதுபற்றி அந்த அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ஜியோன் ஹா கியூ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், எங்களுடைய தாக்குதல் திறனையும் இன்னும் கூடுதலாக வலுப்படுத்தி உள்ளதுடன் 2025 ஆம் ஆண்டுக்குள் ஐந்து உளவு செயற்கைக்கோள்களை அனுப்ப தென்கொரியா திட்டமிட்டு உள்ளது எனத் தெரிவித்தார்.

இதற்காக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படுத்தி உள்ளதுடன் கடந்த 2022 ஆம் ஆண்டு தன்னுடைய சொந்த தொழில்நுட்பத்தின் உதவியுடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரொக்கெட்டை பயன்படுத்தி செயற்கைக்கோள் ஒன்றை ஏவி பரிசோதித்து அதனை வட்ட பாதையில் நிறுத்தி வெற்றி பெற்றது.

இதனால் இந்த பரிசோதனை முயற்சியில் வெற்றி பெற்ற உலகின் பத்தாவது நாடாக தென்கொரியா உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# ரஷ்யா... உக்...

(மொஸ்கோ)
ரஷ்யாவில் உ...
உக்ரைன் நடத்...
தெரிவித்துள்ள...



# இஸ்ரேலுக்கு கடுமையான வர்த்தக கட்டுப்பாட்டை விதித்துள்ள துருக்கி வர்த்தக அமைச்சு

(அங்காரா)
இஸ்ரேல் பாலஸ்தீன மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில் இஸ்ரேலுக்கு கடுமையான வர்த்தகக் கட்டுப்பாட்டை விதிக்கவுள்ளதாக துருக்கி அறிவித்துள்ளது.

இஸ்ரேல் போர் நிறுத்தத்தை அறிவிக்கும் வரை வர்த்தகக் கட்டுப்பாடு தளர்த்தப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவிற்கு தடையின்றி மனிதாபிமான உதவிகளை அனுமதிக்கும் வரை இந்த தீர்மானம் அமுலில் காணப்படும் என துருக்கியின் வர்த்தக அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இதன்படி, சீமெந்து மற்றும் கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட 54 பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் காசாவிற்கு விமானம் மூலமான துருக்கியின் மனிதாபிமான உதவியை இஸ்ரேல் தடுத்ததற்கு எதிராக பதிலடி கொடுக்கப்படும் என வெளியுறவு அமைச்சர் ஹக்கன் ஃபிடான் உறுதியளித்திருந்தார். இந்நிலையில் அவை படிப்படியாக மற்றும் தாமதமின்றி செயற்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்.

காசா மீதான இஸ்ரேலின் போரை கடுமையாக விமர்சிக்கும் நாடுகளில் தற்போது துருக்கியின் பெயரும் இடம்பெற்றுள்ளது. (நி-5)

# ஸ்பெயினில் உருவாகவுள்ள இரத்த மழை பிரித்தானியா விடுத்துள்ள எச்சரிக்கை



(லண்டன்)
ஸ்பெயின் நாட்டுக்குப் பயணிக்க உள்ள சுற்றுலாப்பயணிகளுக்கு இரத்த மழை தொடர்பில் பிரித்தானியாவால் எச்சரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்த மழையால், வெளிச்சம் போதாமையால் விமானங்கள் இரத்து செய்யப்படலாம் அல்லது தாமதமாகலாம் என பிரித்தானிய வெளியுறவுத் துறை அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்பெயின் நாட்டில் சில இடங்களில் வெப்ப அலை காரணமாக கடுமையான வெயில் நீடித்து வருவதாக கூறப்படுகிறது.

இதனால், சஹாரா பாலைவனத்தில் காணப்படும் தூசுக்கள் ஸ்பெயின் நாட்டின் பல பகுதிகளை மூட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது ஸ்பெயின் நாட்டில் சில இடங்களில் மழை பெய்து வருவதால், இந்த தூசியும் மழையும் கலந்து இரத்த மழை என்னும் சிவப்பு நிற மழை உருவாக வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்த மழையினால் வெளிச்சம் குறையும் எனவும் விமானங்களால் பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஸ்பெயினுக்கு சென்றுள்ள பிரித்தானியர்கள் குறித்த இயற்கை மாறுபாட்டால் பாதிக்கப்படக்கூடும் என பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் எச்சரித்துள்ளது.

இந்த வார இறுதியில் பிரித்தானியாவை கேத்லீன் என பெயரிடப்பட்டுள்ள புயல் வலிமையாக தாக்க இருப்பதால் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பாலஸ்தீனிய நகரிலிருந்து 84 உடல்கள் மீட்பு



(காசா)
பாலஸ்தீனர்களின் நகரான கான் யூனிஸில் இருந்து இஸ்ரேல் இராணுவம் வெளியேறிய நிலையில் அங்கிருந்து 84 உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அல் ஜசீரா தெரிவித்துள்ளது.

நோயாளர் காவு வண்டி ஊழியர்கள் இந்த உடல்களை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு காசா நகரத்திலிருந்து இஸ்ரேலியப் படைகள் பின் வாங்கியதை அடுத்து, பல மாதங்கள் தீவிர இஸ்ரேலிய தாக்குதல்கள் மற்றும் சண்டைகளால் பெரும் பேரழிவு அந்த நகரத்தில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிவில் பாதுகாப்புத் தொழிலாளர்களின் உடல்கள் இடிபாடுகளுக்கு அடியில் இருந்து மீட்டுவருவதாக குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ாவின் அணுமின் நிலையம் மீது ...ரைன் ட்ரோன் தாக்குதல்

## ஐ.நா கண்டனம்

...உள்ள அணுமின் நிலையத்தை குறிவைத்து, ...திய ட்ரோன் தாக்குதலுக்கு ஐ.நா கண்டனம் ...து.



ரஷ்யா சரியான நேரத்தில் பதிலடி தாக்குதல் நடத்தியதால் பெரும் அசம்பாவிதம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இல்லையெனில் அணுக் கதிர்வீச்சு ஏற்படும் நிலைமை உருவாகி இருக்கும் என தெரிவித்துள்ள ஐ.நா. அதிகாரிகள் இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவின் மிகப் பெரிய அணுமின் நிலையமான ஜபோரிஜியா அணுமின் நிலையத்தின் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


குறித்த அணுமின் நிலையம் ஆரம்பத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளது.



கடந்த 2022 ஆம் ஆண்டில் ஆரம்பமான போரையடுத்து, குறித்த அணுமின் நிலையத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையே கடந்த 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமான போர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அமெரிக்காவில் தோன்றிய பூரண சூரிய கிரகணம்



(வோஷிங்டன்)

வடக்கு அமெரிக்காவை நேற்று முன்தினம் கடந்து சென்ற பூரண சூரிய கிரகணத்தை மில்லியன் கணக்கான மக்கள் கண்டுகளித்துள்ளனர்.

பூமிக்கும் சூரியனுக்கு நடுவிலான பாதையில் சந்திரன் பயணித்து பூமியின் பார்வையிலிருந்து சூரியனை முழுமையாக மறைக்கும் போது பூரண சூரிய கிரகணம் ஏற்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கும் 32 மில்லியன் அளவிலான மக்கள் நேற்று முன்தினம் ஏற்பட்ட இந்த பூரண சூரிய கிரகணத்தை முழுமையாகவும் ஏனையோர் பகுதியளவிலும் காணக்கூடியதாக இருந்துள்ளது.

இந்நிலையில், பெருமளவிலான மக்கள் பூரண சூரிய கிரகணத்தை முழுமையாக பார்ப்பதற்காக குறிப்பிட்ட பகுதிகளில் ஒன்று கூடியுள்ளனர்.

அத்துடன், அமெரிக்க நாட்டில் இது போன்றதொரு அரிய சூரிய கிரகணம் மீண்டும் 2044 ஆம் ஆண்டளவிலேயே ஏற்பட[illegible] தெரிவிக்கப்பட்டுள்ள[illegible]

# இந்திய தேசிய கொடியை அவமதித்த மாலைதீவு அமைச்சர்

## சர்ச்சைக்குப்பின் மன்னிப்பு கோரினார்

(மாலே)

இந்திய தேசியக் கொடியை அவமரியாதை செய்யும் வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டதால், இடைநீக்கம் செய்யப்பட்ட மாலைதீவு அமைச்சர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

மாலைதீவு அமைச்சர் மரியம் ஷியூனா இந்திய தேசியக் கொடியை அவமதித்து சர்ச்சைக்கு ஆளாகியுள்ளார். இந்தியாவில் உள்ள எதிர்ப்பை விட மாலைதீவில் உள்ள எதிர்ப்பு முய்சு அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுத்துள்ளது.

சர்ச்சை வலுத்ததையடுத்து அந்த பதிவை அமைச்சர் நீக்கினார். முன்னதாக இந்தியாவில், பிரதமர் மோடியை அவமானப்படு[illegible] அமைச்சரவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார் மரியம் ஷியூனா.



தற்போது இரண்டாவது முறையாக இந்தியாவை அவமதித்து அதற்காக மன்னிப்பு கேட்டுள்ளார். மரியம் ஷியுனா மாலைதீவு அதிபர் முகமது முய்சுவின் மக்கள் தேசிய காங்கிரஸைச் சேர்ந்தவர்.

மாலைதீவு பாராளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், ஜனாதிபதி முகமது முய்சுவின் அரசாங்கத்தில் அமைச்சர் மரியம் பிரசாரத்தில் பெரிதும் ஈடுபட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் சமீபத்தில் நான் வெளியிட்ட பதிவு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பதிவு ஏற்படுத்திய குழப்பம் மற்றும் சர்ச்சைக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்ள. என்று அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கடும் பனிமூட்டம்



(வவுனியா)

வவுனியாவில் நேற்றுக் காலை அதிக பனிமூட்டம் காணப்பட்டது.

கடந்த சில நாட்களாக அதிக வெப்பம் காணப்பட்டு வரும் வவுனியாவில் காலை அதிகளவான பனிமூட்டம் காணப்பட்டதுடன் வாகன சாரதிகளும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

நீண்ட காலத்திற்கு பின்னர் இவ்வாறான நிலை வவுனியாவில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-250)

# இரணைமடுக்குளத்தின் கீழ் 15,693 ஏக்கரில் சிறுபோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 15,693 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானம் விவசாய அமைப்புகளின் முழுமையான பங்குபற்றுதலுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழான 2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோக பயிர்செய்கையினை முன்னெடுப்பதற்கான இறுதிக் கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டசெயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் (பதில்) முரளிதரன் தலைமையில் நடைபெற்றது

இதில் இரணைமடுக் குளத்தின் தற்போதைய நீர்மட்டத்தை கருத்தில் கொண்டு பதினையாயிரத்து 693 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானம் விவசாய அமைப்புக்களின் முழுமையான ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. (நி-5-315)

# 1 கோடியே 75 லட்சம் பெறுமதியான கலப்பின சோள விதைகள்

## விற்பனை செய்ய முடியாமல் திண்டாடும் விவசாயிகள்



(வவுனியா)

வவுனியாவில் உற்பத்தி செயயப்பட்ட 1 கோடி 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான புதிய கலப்பின சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் காணப்படுகின்றனர்.

புதிய கலப்பின சோளன் உற்பத்தியானது பூவரசன்குளம், குருக்கள் புதுக்குளம், மணியர்குளம், எருக்கலம்கல், வேலங்குளம், பாவற்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

சோளச் செய்கையில் ஈடுபட்டவர்கள் கலப்பின சோளன் விதைகளை பதப்படுத்தி அதனை நெளுக்குளம் பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சோளன் விதை உற்பத்தி களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள போதும் குறித்த சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சோளன் உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் பலரும் பெரும் நட்டம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது சிறுபோக பயிற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், ஏற்கனவே சோளன் உற்பத்தியில். ஈடுபட்ட விவசாயிகள் தவிர ஏனைய விவசாயிகளுக்கு சோளப் பயிற்செய்கை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளையும் ஆலோசனைகளையும் சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் முறையாக மேற்கொள்ளாமையால் குறித்த சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்த நிலை நீடித்தால் அதன் முளை திறன் குறைவடைந்து அவற்றை கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (நி-5-250)

# இன்று ஒரு தகவல் 90



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மெட்ரிக் கடிகாரம்

எனக்குத் தெரிந்த ஒரு தாத்தா இருந்தார். அவரிடம் போவது என்றால் எங்களுக்கெல்லாம் ரொம்பப் பயம். அடிக்க மாட்டார். ஆனால் அதை விட கஷ்டமான ஒரு காரியத்தை செய்வார். அதாவது கணக்குப் போடுவார்... மனக் கணக்கு!

புதிர் மாதிரி எதையாவது சொல்லி அதற்கு விடை என்ன என்று கேட்பார். மூளைக்கு பயிற்சி கொடுப்பாராம். பேசாமல் தெருவிலே கிட்டிப்புள்ளு விளையாடிக் கொண்டு இருந்திருக்காலாமே இவரிடம் வந்து மாட்டிக் கொண்டோமே என்று தோண்றும். மாட்டிக் கொண்டதற்குப் பிறகு என்ன செய்வது. கொஞ்ச நேரம் யோசிக்கிறது மாதிரி யோசித்து பிறகு ஒன்றும் தெரியவில்லை தாத்தா என்று சொல்லி அவர் சொல்லுகின்ற விளக்கத்தை பொறுமையாகக் கேட்டுக் கொண்டு அதன் பிறகு தான் தப்பித்து வர முடியும். அப்படி என்ன?

அவர் பெரிய கணக்கை போட்டு விடுவார் என்று கேட்கிறீர்களா? உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகின்றேன். உங்களால் முடியுதா? பாருங்களேன். காலே முக்கால் காசுக்கு நாலே அரைக்கால் வாழைக்காய்! காசுக்கு எத்தனை காய்? இது அவர் போடுகின்ற மனக் கணக்கு யாருக்கு பதில் தெரியும்?

வீசம்-மாகாணி கணக்கையெல்லாம் விட்டுட்டு வெகு தூரத்திற்கு வந்து விட்டோம்... இப்போது மெட்ரிக் சிஷ்டத்திற்கு வந்து விட்டோம். அதற்கும் கல்குலேட்டர் தேவைப்படுகிறது. இப்ப போய் காலே அரைக்கால் அரையே அரைக்கால் என்று சொல்லிக் கொண்டு இருந்தால் அது எப்படி சார்?

இந்த காலத்துப் பிள்ளைகளுக்கு இப்போது எல்லாம் பத்து பத்தா சொன்னால் தான் புரியும்.

கொஞ்ச காலத்திற்கு முன்னாடி நமது ஊரிலே ரூபாய்க்கு 16 ஆனால் இப்போது ரூபாய்க்கு 100 காசு.

மைல் கணக்கு எல்லாம் மாறி இப்போது கிலோமீற்றர் கணக்குக்கு வந்து விட்டது.

அந்த வகையிலே ஒரு லேட்டஸ்ட் யோசனையை இப்போது சில பேர் கொண்டு வருகிறார்கள். அதவாது மணிக்கணக்கையும் மெட்ரிக் சிஷ்டத்திற்கு கொண்டு வந்து விட்டார்கள். இப்போது எல்லாம் ஒரு நாளைக்கு பகல் 12 மணி... இரவு 12 மணி! இதை இனிமேல் பகல் 10 மணி இரவு 10 மணி என்று மாற்றிக் கொண்டால் என்ன என்று இவர்கள் கேள்வி! அதே மாதிரி ஒரு மணிக்கு 100 நிமிடம்! ஒரு நிமிடத்திற்கு 100 வினாடி! இது நடைமுறைக்கு வந்து விட்டால் இனிமேல் மெட்ரிக் கடிகாரம் புழக்கத்திற்கு வந்து விடும்.

மெட்ரிக் கடிகாரம் என்றால் வேறு ஒன்றும் இல்லை. இப்போது இருக்கின்ற கடிகாரத்தை 12 மணி ஆக பிரித்தார்கள். அதிலே 10 பிரிவாக பிரித்து இருப்பார்கள்.

அவ்வளவு தான்! இப்போது 12 என்று இருக்கின்ற இடத்திலே அப்போது 10 என்று இருக்கும். அதாவது 10 மெட்ரிக் மணி. மத்தியானம் 12 மணி, நடு ராத்திரி 12 மணி என்று சொல்லுகின்றோம் அல்லவா? அவையெல்லாம் மத்தியானம் 10 மணி நடு ராத்திரி 10 மணி என்று ஆகிவிடும். அப்போது உள்ள கடிகாரத்திலே டயலை மட்டும் மாற்ற வேண்டியிருக்கிறது அவ்வளவு தான்.

மெட்ரிக் கடிகாரத்திலே ஒரு முள் இருந்தாலே போதும். அதாவது சின்ன முள். இப்போது மணி என்ன என்று யாராவது கேட்டால் நீங்களே பார்த்துக் கொள்ளுங்களேன்என்று கையை நீட்ட வேண்டிதில்லை. நாமே சுலபமாக பார்த்துக் கொள்ளலாம். இருக்கிறது ஒரு முள்ளுத் தான் அது எங்கே இருக்கு என்று பார்க்க வேண்டியது... 7 மணியை தாண்டி 40 ஆவது பிரிவிலே இருக்கின்றதா...? உடனே 7.40 என்று சொல்லி விட வேண்டியது தான்.

எலக்ட்ரானிக் வகைக் கடிகாரத்திலே இந்த முறையை புகுத்துவது இன்னமும் சுலபம். வாழ்க்கையிலே எல்லாவற்றையும் ரொம்ப சுலபமாக்கிக் கொண்டு வருகின்றோம். உயிரைப் போக்குவது உற்பட!

நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவு எல்லாவற்றையும் பத்து பத்தாக ஆக்கி விட்டோம். இனிமேல் காலம் தானே பாக்கி இதிலேயும் கை வைக்க வேண்டியது தானே!

ஒரு இரகசியம்...

இயற்கையை புரிந்து கொண்டவர்களுக்கு எல்லாமே சுலபம் தான் இயற்கையை மெட்ரிக் சிஷ்டத்திற்கு சப்போட் தான் சார்! அதனாலே தான் கையிலே பத்து விரல் காலிலே பத்து விரல்! கையிலே 16 காலிலே 24 என்று இல்லை.


ஒரு மாமனார்... மாப்பிள்ளைக்கு பத்து மோதிரம் செய்து போட்டு விடுகிறேன் ஆனால் கை முழுவதும் மோதிரம் போடுவது சிரமம் என்று சொன்னார். என்ன காரணம்?

அந்த மாப்பிள்ளைக்கு மொத்தம் 12 விரல்... ஒரு கைக்கு 6 வீதமா!

சில சமயம் இயற்கையோட மெட்ரிக் சிஷ்டத்திலேயும் இப்படி சில தவறுகள் ஏற்பட்டுப் போவது அதனாலே கஷ்டப்படுவது மாமன்மார்கள் தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகைத் திருநாளான நோன்புப் பெருநாளே வருக! வருக!



நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம், நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவ மானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

**ரம்ழான் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது**



ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்புமுறையிலும் காணக் கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதே போன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன் நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் தொழில் நடவடிக்கைகளும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும், சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும், புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக.

மேலும் எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினை நீங்கவும் அல்லாஹ் கிருபை செய்வானாக. ஆமீன்.

**கலாபூஷணம், பரீட் இக்பால், யாழ்ப்பாணம்.**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3086

### அஸ்ரின்





### பரீனா

ஏண்டா உங்க அப்பா எந்தநேரமும் உன்னைத் திட்டிக்கிட்டே இருக்காரு



சிங்கத்தை கொஞ்ச முடியாதில்ல அதான்...

### ரஞ்சன்



ராமாயணப் போர் -பெண்ணுக்காக
மகாபாரதப் போர் - பெண்ணுக்காக
பாகுபலிப் போர்- பெண்ணுக்கா
இதில இருந்து என்ன தெரியுது அப்போதில இருந்து
இப்ப வரைக்கும் பொண்ணுங்களாலே ஒரே அக்கப்போர்தான்

### சயானா

ஏங்க மதுரைக்கு "துரு" பஸ் இருக்கா?



இல்லைங்க எல்லாமே பெயிண்ட் அடிச்ச பஸ்தான்...!

### றியாஸ்


மாமனார் என் பொண்ண கட்டிக்க உனக்கு என்ன ஸ்டேட்டஸ் இருக்கு...



வாட்ஸ் அப்ல வந்து பாருங்க என்னோட ஸ்டேட்டஸ் என்னானு தெரியும்.

### தாட்சா

ஒன்னுமே புரியாத பாட்டு ஹிட் ஆகுதுனா... ஒன்றுமே புரியாத நம்ம வாழ்க்கை ஒரு நாள் ஹிட்ட ஆகும்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 451





அதில் மனிதர்கள் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. இரண்டு நாளைக்கு முன்னால் அவள் பார்த்த கப்பல்களிலே அது ஒன்று என்பது பூங்குழலிக்கு நன்கு தெரிந்தது. இளவரசரைச் சிறைப் பிடித்துக்கொண்டு போவதற்கென்று வந்த கப்பல்களில் ஒன்று, அதுவே சேற்றிலே சிறைப்பட்டுக் கிடப்பதைக்கண்டு பூங்குழலி ஆச்சரியக் கடலில் மூழ்கினாள்!

நாற்பத்தாறாம் அத்தியாயம் பொங்கிய உள்ளம்

இளவரசர் யானையின் காதில் மந்திரம் ஓதினார், யானை படுத்தது. இருவரும் அவசரமாக அதன் முதுகிலிருந்து இறங்கினார்கள். கரைதட்டி மணலில் புதைந்திருந்த மரக்கலத்தின் அருகில் சென்று பார்த்தார்கள். அந்தக் கப்பலின் கதி பார்க்கப் பரிதாபமாயிருந்தது. பாய் மரங்கள் தாறுமாறாக உடைந்து கிடந்தன. ஒருவேளை அந்த உடைந்த கப்பலுக்குள்ளேயோ அல்லது அக்கம் பக்கத்திலோ யாராவது இருக்கக் கூடும் என்று சந்தேகித்தார்கள். இளவரசர் கையைத் தட்டிச் சத்தம் செய்தார். பூங்குழலி வாயைக் குவித்துக்கொண்டு கூவிப் பார்த்தாள் ஒன்றுக்கும் பதில் இல்லை. இருவரும் தண்ணீரில் இறங்கிச் சென்று கப்பலின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு ஏறினார்கள். கப்பலின் அடிப் பலகைகள் பிளந்து தண்ணீரும் மணலும் ஏராளமாக உள்ளே வந்திருந்தன. ஒருவேளை அதை நீரிலே தள்ளி விட்டுக் கடலில் செலுத்தலாமோ என்ற ஆசை நிராசையாயிற்று. அந்தக் கப்பலை அங்கிருந்து தண்ணீரில் நகர்த்துவது இயலாத காரியம். கரையில் இழுத்துப் போடுவதற்கு ஒரு யானை போதாது. பல யானைகளும் பல ஆட்களும் வேண்டும். அதைச் செப்பனிடப் பல மாதங்கள் மரக்கலத் தச்சர்கள் வேலை செய்தாக வேண்டும்.

சிதைந்து கிடந்த பாய் மரங்களிடையே சிக்கியிருந்த புலிக்கொடியை இளவரசர் எடுத்துப் பார்த்தார். அது அவருக்கு மிக்க மன வேதனையை அளித்தது என்று நன்றாய்த் தெரிந்தது.

"பூங்குழலி! நீ பார்த்த கப்பல்களில் ஒன்றுதானா இது?" என்று கேட்டார்.

"அப்படித்தான் தோன்றுகிறது. இன்னொரு கப்பல் அடியோடு முழுகித் தொலைந்து போய்விட்டது போலிருக்கிறது!" என்றாள் பூங்குழலி. அவளுடைய குரலில் குதூகலம் தொனித்தது.

"என்ன இவ்வளவு உற்சாகம்?" என்று இளவரசர் கேட்டார்.

"தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போவதற்கு வந்த கப்பல்கள் முழுகித் தொலைந்து போனால் எனக்கு உற்சாகமாக இராதா?" என்றாள் பூங்குழலி.

"நீ உற்சாகப்படுவது தவறு, சமுத்திர குமாரி! ஏதோ விபரீதமாக நடந்து போயிருக்கிறது. புலிக்கொடி தாங்கிய மரக்கலத்துக்கு இந்தக் கதி நேர்ந்தது எனக்கு வேதனை அளிக்கிறது. இது எப்படி நேர்ந்தது என்றும் தெரியவில்லை. இதில் இருந்த வீரர்களும் மாலுமிகளும் என்ன ஆனார்கள்? அதை நினைத்தால் என் மனம் மேலும் குழம்புகிறது. இன்னொரு கப்பல் முழுகிப் போய் இருக்கவேண்டும் என்றா சொல்லுகிறாய்?"

"முழுகிப் போயிருக்கலாம் என்று சொல்கிறேன். முழுகிப் போயிருந்தால் ரொம்ப நல்லது."

"நல்லதில்லவேயில்லை, அப்படி ஒரு நாளும் இராது. இந்தக் கப்பலின் கதியைப் பார்த்துவிட்டு இன்னொரு கப்பல் அப்பால் நிறையத் தண்ணீர் உள்ள இடத்துக்குப் போயிருக்கலாம். இந்தக் கப்பல் ஏன் இவ்வளவு கரையருகில் வந்திருக்க வேண்டும் என்றும் தெரியவில்லை. சோழ நாட்டு மாலுமிகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கப்பல் விட்டுப் பழக்கமுள்ள பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் இத்தகைய தவறு ஏன் செய்தார்கள்? எப்படியும் இதிலிருந்தவர்கள் தப்பிப் பிழைத்திருக்க வேண்டும். ஒன்று மற்றக் கப்பலில் ஏறிப் போயிருக்க வேண்டும்! வா! போய்ப் பார்க்கலாம்!"

"எங்கே போய்ப் பார்ப்பது, இளவரசே! சூரியன் அஸ்தமித்து நாலாபுறமும் இருள் சூழ்ந்து வருகிறது!" என் றாள் பூங்குழலி. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கரடி மனிதன்

அடர்ந்த காட்டையொட்டிய ஒரு வீட்டில் ஒரு விதவை வாழ்ந்து வந்தாள். அவளுக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் பெயர் ஸ்நோ ஒயிட் இளையவள் பெயர் ரெட் ரோஸ். இருவரும் நல்ல அழகிகள்.

சகோதரிகள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர். காட்டில் வசிக்கும் விலங்குகள் தான் அவர்களுக்கு உற்ற நண்பர்கள். அப்போது கடுமையான பனிக்காலம்.

ஒரு நாள் இரவு வீட்டின் கதவு தட்டப்பட்டது. ஸ்நோ ஒயிட்



சென்று கதவைத் திறந்தாள். அங்கே கரடி ஒன்று குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. கரடியைக் கண்டதும் ஸ்நோ ஒயிட் பயந்தாள். ஆனால், அந்தக் கரடி மனிதக் குரலில் பேசியது. குளிரில் நடுங்கும் தனக்கு அடைக்கலம் தரும்படி கெஞ்சியது. கரடி கூறு[illegible] கேட்டு ஸ்நோ ஒயிட் மனமிரங்கினாள். உடனே அதனைக் கணப்பருகே அழைத்துப் போனாள். கரடி கணப்பருகே அமர்ந்து கொண்டது. சிறிது நேரத்தில் சகோதரிகள் இருவரும் கரடியுடன் நெருங்கிப் பழகிவிட்டனர்.

அதன்பின் கரடி தினமும் அங்கு மாலை வேளையில் வந்து விடும். கணப்பருகே குளிர் காயும். சிரித்துப் பேசி அவர்களுடன் விளையாடும். அதிகாலையில் காட்டிற்குள் சென்றுவிடும்.பனிக்காலம் முடிந்ததும் சகோதரிகள் இருவரிடமும் கரடி பிரியா விடை பெற்றது.

இனி உங்களைச் சந்திக்க முடியுமோ என்னவோ? என்னுடைய செல்வத்தைத் தேடி நான் செல்கிறேன். இடையில் உங்களைச் சந்திக்க நேர்ந்தது. எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது," என்று மனம் நெகிழக் கூறி விடைபெற்றுச் சென்றது.

ஸ்நோ ஒயிட்டும் ரெட் ரோஸும் கலங்கிய கண்களுடன் கரடிக்கு விடை கொடுத்து அனுப்பினர். கரடியும் அவர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் விடை பெற்றுச் சென்றது.

நாட்கள் சென்றன ஒரு நாள் சகோதரிகள் இருவரும் விறகு பொறுக்குவதற்காகக் காட்டிற்குள் சென்றனர். அங்கு ஒரு இடத்தில் குகை ஒன்று இருப்பதைக் கண்டனர். உள்ளே சென்று பார்க்க விருப்பம் கொண்டனர். குகைக்குள் நுழைந்தனர். குகை நீளமாகப் போய்க் கொண்டே இருந்தது. ஒரிடத்தில் இருளையும் மீறி ஒளி வீசிக் கொண்டிருந்தது. ஒளி வரும் இடமருகே சென்றனர்.

அங்கே வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கக் கற்களாலான ஆபரணங்களும் தங்க நகைகளும் குவிந்து கிடந்தன. அவற்றைக் கண்டு இருவரும் பிரமித்துப் போயினர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மடுமாதாவைத் தரிசித்தபோது எம் கண்கள் கலங்கின

ஒரு காலத்தில் நம் தமிழ் மண்ணில் சமய பேதம் என்பது மருந்துக்கும் இருந்ததில்லை.

இந்த நாட்டின் ஆதிக்குடிகளாகிய சைவ மக்கள் எவ்வுயிர்க்கும் தீங்கில்லாத வாழ்வை மேற்கொண்டனர்.

நம் நாடு அந்நியராட்சிக்கு உட்பட்டபோது, மத மாற்றங்கள் நடக்கலாயின.

கிறிஸ்தவ சமயத்துக்கு மாறுபவர்களுக்கே உயர் கல்வியும் அரச உத்தியோகமும் என்ற போது, சைவ சமயத்திலிருந்து ஒரு பகுதியினர் மதம் மாறினர்.

அவ்வாறு அவர்கள் மதம் மாறினாலும் மனம், வாக்கு, காயத்தால் சிவனை வழிபட்டனர். கூடவே தமது தாய்ச் சமயம் வாழ வேண்டும் என மனத்தால் விரும்பினர்.

இதுதவிர, ஒரு குடும்பத்தில் ஒருவர் கத்தோலிக்கத்துக்கு மாற, மற்றவர் சைவ சமயத்தைப் பின்பற்ற இரு தரப்பு உறவுகளும் சமய ஒற்றுமையை வலுப்படுத்தின.

இறைவனை வழிபடுவதற்கு வெவ்வேறு மார்க்கங்கள் உண்டு. எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும் ஈற்றில் மாதொரு பாகனார் தாம் வருவார் என்ற நம்பிக்கை நம் தமிழ் மக்களிடம் வலிமை பெற்றிருந்தது.

இந்த அடிப்படையில் சைவ மக்கள் தேவாலயத்துக்கும் கத்தோலிக்க மக்கள் சைவக் கோயில்களுக்கும் சென்று வழிபாடு நடத்தினர்.

இதற்கு மன்னார் மருதமடு மாதாவின் வழிபாடு தக்கசான்று.

ஆம், மடுமாதாவை சைவ மக்கள் அம்மனாக வழிபட்டனர். தங்களின் அம்மனே மடுவில் மாதாவாகக் காட்சி தருகிறார் என்பது சைவ மக்களின் நம்பிக்கை.

அதேபோன்று கத்தோலிக்க மக்களும் மடுமாதா மீது பேரன்பு கொண்டிருந்தனர்.

இந்தப் பிணைப்பின் காரணமாக மடுமாதா யாழ். மாவட்டத்துக்கு பவனியாக வருகின்ற ஏற்பாடு அமையப் பெற்றது.

ஆம், இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் 1974ஆம் ஆண்டு மடுமாதாவின் திருச்சொருப பவனி யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

மடுமாதாவைத் தரிசிப்பதை மக்கள் பேறாகக் கருதினர். அந்தத் தரிசனத்தை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்.

மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் மடுமாதா வந்தபோது அச்சிறு வயதில் மடு மாதாவை வழிபடப் பெற்றேன்.

50 ஆண்டுகள் நிறைவாயிற்று. இன்னமும் அந்த மடுமாதாவின் கருணை முகம் மறக்க முடியவில்லை.

மீண்டும் 50 ஆண்டுகள் நிறைவில் 2024 ஆம் ஆண்டு, ஏப்ரல் 9ஆம் திகதி நேற்றைய தினம் மடுமாதாவை மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் தரிசித்தோம்.

கண்கள் கலங்கின. காரணம் இரண்டு. அதில் ஒன்று 50 ஆண்டுகள் கடந்து அதேயிடத்தில் மடு மாதாவைத் தரிசிக்கின்ற அந்தப் பேற்றை நினைத்தபோது கண்கள் கலங்கின.

மற்றையது, திருக்கேதீச்சரம் நுழைவாயில் வளைவை நினைத்ததும் எம் கண்கள் கலங்கின.

ஏன்தான் இப்படி. எங்கள் மத்தியில் மதவாதம் எப்படி ஏற்பட்டது. இனியும் வேண்டாம் மதபேதமை. மடுமாதாவின் திருச்சொருப பவனி சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தட்டும். அதன் அடையாளமாக திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு கம்பீரமாக எழுந்து நிற்கட்டும். இதற்கு மன்னார் ஆயர் இல்லம் தனது ஆதரவை அறிக்கையிடும் என நம்புவோம்.

# அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## வர்த்தக அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் பண்டிகைக் காலத்தில் பெரிய வெங்காயத்தைத் தவிர ஏனைய எந்தவொரு அத்தியாவசிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை பண்டிகையை இலக்காகக் கொண்டு வர்த்தகர்கள் பொருட்களின் விலையினை செயற்கையாக உயர்த்த முற்பட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளையும் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் மற்றும் தரமற்ற பொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டினார்.

இதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை சீனி, தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக புத்தாண்டு காலப்பகுதியில் இனிப்புப் பண்டங்களின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், கடந்த வருடங்களைக் காட்டிலும் இந்த வருடத்தில் இனிப்புப் பண்டங்களின் கொள்வனவு வீழ்ச்சியடைந்துள்ளதாக அதன் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் சட்டமாகிறது - ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு சட்ட முறைமையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் சட்டத்தரணிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்

சீர்குலைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான உடனடித் தீர்வு சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டமே எனத் தெரிவித்த ஜனாதிபதி,

அதன் பயனை மக்களுக்கு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டமாக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் அனைத்து துறைகளும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக புதிய சட்ட முறைமையொன்று கொண்டு வரப்படும்.

அந்த செயற்பாடுகளுக்கு சட்டத்துறையில் உள்ள அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள்

# நேற்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் நேற்று முதல் மே 10 ஆம் திகதி வரை இடம்பெறும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி வாக்களிக்க தகுதி இருந்தும் இந்த ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க முடியாதவர்களுக்கு மே 10 ஆம் திகதி வரை கால அவகாசம் அளிக்கப்படுகின்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தகுதியுடைய வாக்காளர்கள், நாடளாவிய ரீதியில் உள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலோ அல்லது தேர்தல் அலுவலகங்களிலோ தமது பெயர்களை வாக்காளர் பதிவேட்டில் இணைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

அதனைவிட தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் சென்று பெயரை உள்ளிடலாம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில், ஜூலை 17 ஆம் திகதிக்குப் பிறகு எந்த திகதியிலும் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்களை அழைக்க தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்படும்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் இறுதியில் அல்லது ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இலங்கைக்கு வந்து குவியும் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

இந்த வருடம் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 39,798 வெளிநாட்டவர்கள் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஏப்ரல் முதல் வாரத்தில் 7,831 இந்தியப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 4,892 பேரும் ரஷ்யாவிலிருந்து 4,087 பேரும் ஜேர்மனியிலிருந்து 2,712 பேரும் அதிக எண்ணிக்கையில் இலங்கைக்கு வந்துள்ளதாக அந்த சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

# புத்தாண்டை முன்னிட்டு

## விசேட போக்குவரத்து சேவைகள்

(கொழும்பு)

புத்தாண்டை முன்னிட்டு கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காக விசேட தொலைதூர போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்- சிங்கள புத்தாண்டு தொடங்கும் இந்த வாரம் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் பணிபுரியும் பலர் தங்கள் கிராமங்களுக்கு செல்ல தயாராக உள்ளனர்.

அவர்களுக்காக இம்முறையும் விசேட தொலைதூர போக்குவரத்து சேவைகள் செயற்படுகின்றன.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சபை 1,400 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

மேலும், பண்டிகை காலத்தை முன்னிட்டு கிராமங்களுக்கு செல்லும் பொதுமக்களுக்காக 12 சிறப்பு ரயில்களை இயக்க ரயில்வே துறை திட்டமிட்டுள்ளது. (நி-5)

# சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்க சந்திரிக்காவுக்கு உரிமை உண்டு

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மீளக்கட்டியமைக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு உரிமை உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (09) காலை நடைபெற்ற [illegible]றின் பின்னர் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு உரிமை உள்ளது.

அவர் கட்சியை விட்டு வெளியேறிய நேரங்களும் உண்டு. வேறு கட்சிகளை உருவாக்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. தற்போது அவர் திரும்பிவந்து விட்டார். கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப அவருக்கு உரிமை உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இன்றைய பலாங் கொடை-வெலிமடைப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

### கடவத்தைகள் (பாதுகாப்பு அரண்கள்)

கண்டி இராச்சியத்தின் பாதுகாப்புக்கான ஏதுக்கள் இவற்றுடன் நின்று விடவில்லை. அதன் எல்லைப் புறங்களில் கடவத்தைகளிருந்தன. கரைப்பிரதேசங்களினின்று எதிரிகளும் ஒற்றர்களும் உட்புகாத வண்ணம் இவ்விடங்களில் முள் வேலிகள் அமைக்கப்பட்டு அவற்றில் காவலாளர்கள் இராப் பகலாகக் காவல் புரிந்தனர்.

மலை நாட்டினுள் பிரவேசிக்கும் யாவரும் இங்கு பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர். விசேஷ மற்றும் அவசர காலங்களில் நாடு எங்கிலும் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. எல்லாக் கிராமங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லாச் சந்திகளிலும் காவல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டமையினால் எந்த ஒருவரும் அவதானிக்கப்படாமல் மலைநாட்டினுள் புகமுடியாமற் போயிற்று என நொக்ஸ் கூறுகின்றார். அக்காலங்களில் உட்செல்வதற்கு பலகைகளில் முத்திரையிடப்பட்ட அடையாளச் சீட்டுக்களும் வழங்கப்பட்டன.

### கண்டி இராச்சியத்தின் போர் முறை

கண்டியர் தமது நாட்டின் இயற்கை நிலையத்துக்கும், சுவாத்திய நிலைகளுக்கும் ஏற்ற போர் முறையில் உன்னத தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்கள் தாம் நன்கறிந்த காடுகளிலும் மலைகளிலும் ஔந்திருந்து பகைவர்களைத் தாக்கும் "கொரில்லாப் போர்" முறையினால் அங்குவந்த ஐரோப்பிய சாதியினரின் ஆட்சிக்கு மிக்க தொல்லைகளைக் கொடுத்தனர். கண்டியர், எதிரியுடன் நேருக்குநேர் தாக்குதலில் ஈடுபடாது காடுகளில் மறைந்து நின்று அவர்களைத் துன்புறுத்துவதிலேயே அதிகளவில் ஈடுபட்டனர்.

அந்நியப் படைகள் ஒருவருக்குப்பின் ஒருவராக நடந்து வரும் ஒடுக்கமான ஒற்றையடிப் பாதைகளுக்குக் குறுக்கே பெரும் மரங்களையிட்டு அவர்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தினர். பகைவரின் தளபாடங்களையும், உணவுகளையுங் கொண்டு செல்லும் கூலியாளர்களைத் துண்டித்தும் பட்டாளங்களுக்கிடையே தொடர்புகளை முறித்தும் அவலத்துக்குள்ளாக்கினர். கணவாய்களின் உயர் மலைகளுக்குப் பின்னின்று பகைவரைத் துப்பாக்கிகொண்டும் தாக்கினர்.

இவ்விதமாக இரண்டு அல்லது மூன்று கண்டி வீரர்கள் தனித்து நூற்றுக் கணக்கான பகை வீரர்களைக் கொண்ட ஒரு முழுப் படையையே முன்னேறாது தடுக்க அவர்களால் முடிந்தது. தம் முயற்சிகள் வெற்றியளிக்காத வேளைகளில் அவர்கள் காடுகளிலும், மலைகளிலும் ஓடிஒளித்தனர்.

பகைவர்களின் பலம் குன்றிய வேளையில் மீண்டும் அவர்களைத் தாக்கி நாசஞ் செய்தனர். மேலும் காடுகளின் வழியாகச் செல்லும் பொழுது, பகைவர்களைக் காட்டுக் காய்ச்சல் பீடித்தமையானது அவர்களின் துன்பத்தைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தது. மாரி காலங்களில் நதிகளைக் கடப்பதும் பகைவர்களுக்கு மிகக் கடினமாயிற்று.

### கண்டி இராச்சியத்தின் இராணுவம்

நூறு வரையான வீரர்கள் கொண்ட அரசனின் மெய்க்காப்பாளர் படைதான் அரசனிடமிருந்த நிரந்தரமான இராணுவப் படையாகும். இதில் மலாய், மலபார், முஸ்லிம் வீரர்களும் இடம் பெற்றிருந்தனர். இதனைத் தவிர இராச்சியத்தின் எல்லைப் புறங்களில் காவல் புரிவதற்கென "மடுவே இலாக்கா" என ஓர் ஏற்பாடிருந்தது. இதன் தலைவன் மடுவே லேக்கம் எனப்பட்டான். தேசிய அவசர காலங்களில் மக்களிடமிருந்து கட்டாய இராணுவச் சேவையைப் பெறுவதற்கு ஒழுங்குகள் இருந்தன.

கபடாகம் அல்லது அரச கிராமங்கள் யாவும், வாலிபர்களை இராணுவ சேவைக்காக கண்டிக்கு அனுப்பி வைத்தன. போர் அபாயம் ஏற்படுங் காலங்களில் திசாவைகள் தத்தம் திசாவனிகளுக்குச் சென்று கிராமங்கள் தோறும் நிலமுடையவர்களிடமிருந்து இளைஞர்களைப் போர்ச் சேவைக்குச் சேர்த்தனர். போருக்குச் சென்ற கிராமவாசிகள் 20 நாள்களுக்குத் தேவையான உணவைத் தம்முடன் கொண்டு சென்றனர். இவ்விதமாக இரண்டாம் இராஜசிங்கன் 70,000 படை வீரர்களைத் திரட்டினான் எனச் சரித்திரம் கூறும்.

போர்த்துக்கேய, ஒல்லாந்தப் போர்களினின்று சிங்களவர்கள் ஐரோப்பியப் போர்முறைகளை வெகுவிரைவில் கற்றுத் தமது வழமையான ஈட்டிகள், அம்புகள் எனும் ஆயுதங்களுடன் துப்பாக்கிகளை ஆக்கவும் உபயோகிக்கவும் பழகிக்கொண்டனர். உலகத்திலே அதி சிறந்த துப்பாக்கிகளை கண்டியர் உற்பத்தி செய்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய இயற்கையரணும் சுய பாதுகாப்புமே கண்டி அரசை அந்நியரிடமிருந்து பாதுகாத்தது. கண்டியர் தம்முள் பகைத்துத் தம் நாட்டை அந்நியருக்குக் காட்டிக் கொடுக்கும் வரையில் அந்நியர் மலைநாட்டை அடிமைப்படுத்த முடியவில்லை.

### கண்டியிலிருந்த ஆட்சிமுறை

புராதன காலத்தில் இலங்கையில் எத்தகைய ஆட்சி நடைபெற்றதோ ஏறத்தாழ அவ்வகையான நிர்வாகமே கண்டி இராச்சியத்தில், ஆங்கிலேயரின் வருகையின்போது நடைபெற்றதெனலாம். பல்லாண்டுகளாகக் கண்டி நாட்டில் வாழ்ந்த றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கிலேயர், மலைநாட்டில் நிலவிய ஆட்சி முறையினை மிகத் திறம்பட வர்ணித்துள்ளார்.

### கண்டி இராச்சியத்தின் நாயக்க மன்னர்கள்

1739 இல் காலமான நரேந்திரசிங்கன் என்பவனே கண்டி இராச்சியத்தின் இறுதிச் சிங்கள அரசன். அவனுக்குப்பின் சிம்மாசனமேறிய மன்னர்கள் நால்வரும் தென்னிந்திய அரச குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். சிங்கள அரசர்கள், தம் மனைவியரைத் தென்னிந்தியாவிலுள்ள மதுரை அரச குடும்பத்தினின்று பெறுவது, நீண்ட காலத்து மரபாக இருந்து வந்தது. அரசியரின் உற்றார் உறவினர், கண்டியில் ஒரு விசேட வீதியில் (மலபார் வீதி) வசித்தனர். அவர்கள் கண்டியரசில் உயர் பதவிகளை வகிக்காவிடினும், அரண்மனையில் அதி செல்வாக்குடையோராக விளங்கினர்.

அதாவது மன்னர் நரேந்திர சிங்க ஆட்சிபுரிந்தது 1707 முதல் 1739 வரை.மன்னருக்கு அடுத்து ஆட்சிபுரிய வாரிசு இன்றிப் போனதால் அவரின் முதலாவது மனைவியின் சகோதரர் ஸ்ரீ விஜய ராஜசிங்கன் மதுரையிலிருந்து வரவழைக்கப்பட்டு அரசராக்கப்பட்டார். அதுபோலவே ஸ்ரீவிஜய ராஜசிங்கனுக்கும் வாரிசு இல்லாத நிலையில் அவரின் முதல் மனைவியின் சகோதரர் கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் (1747 - 1782) மதுரையிலிருந்து அழைக்கப்பட்டு மன்னராக ஆக்கப்பட்டார்.

இப்படி நாயக்க வம்சத்து மன்னர்கள் சிங்கள பௌத்தர்களை ஆண்டது குறித்து பிற்காலங்களில் இனவாத கண்ணோட்டத்தோடு பார்க்கப்பட்டாலும் அன்றைய ஆரம்ப கட்டத்தில் இந்த அளவு இனவாதத்துடன் அணுகப்படவில்லை. அவர்களையும் ஒரு சிங்கள மன்னனாகவே கருதினார்கள். அந்த நாயக்க மன்னர்களும் பௌத்த மதத்துக்கு மாறி தம்மை சிங்கள மக்களின் அரசனாகத்தான் ஆட்சி நடத்தினார்கள்.

குறிப்பாக கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் தான் பௌத்த மதத்தைப் பலப்படுத்துவதற்கான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புத்தரின் புனிதப் பல்லை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. புனிதப்பல்லை மக்கள் வணங்குவதற்காக வருடாந்தம் தலதா பெரஹர கொண்டாட்டம் 1753இல் இவரின் ஏற்பாட்டிலேயே தொடங்கப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக நலிந்து போயிருந்த பௌத்த மதத்தை கட்டியெழுப்புவதற்காக அன்றைய சீயம்நாட்டு (தாய்லாந்து) அரசருக்கு தூது அனுப்பி அங்கிருந்து தேரவாத பௌத்த பிக்குகளை வரவழைத்து சீயம் நிகாய ஆரம்பிக்கப்பட்டது. பல நிலங்கள் விகாரைகளுக்கு வழங்கப்பட்டது. சிதைவுற்றிருந்த பல விகாரைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன.

1782இல் மன்னர் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் குதிரையிலிருந்து விழுந்ததில் மரணமானார். அவரைத் தொடர்ந்து அவரது சகோதரர் ஸ்ரீ ராஜாதி ராஜசிங்கன் (1782 - 1798) ஆட்சியேறினார். இவரது ஆட்சியில் தான் அரசருக்கு எதிராக கண்டிப் பிரதானிகளதும், அதிகாரிகளதும் அதிருப்திகள் அதிகரித்தன. அவர்கள் அரசருக்கு எதிராக சூழ்ச்சி செய்துகொண்டிருந்தனர்.

ஸ்ரீ ராஜாதி ராஜசிங்கனுக்கு அடுத்ததாக முடிசூட்டப்பட்ட அவரின் மூத்த மனைவியின் சகோதரர் முத்துசாமியை ராஜாதிராஜசிங்கனுக்குப்பின்னர் முடிசூட்ட விடவில்லை. அதற்குப்பதிலாக இரண்டாவது மனைவியின் சகோதரன் ஸ்ரீவிக்கிரமாராஜசிங்கனை முடிசூட்டினர் .

கண்டியின் சிங்களப் பிரதானிகள், ஒருவன் மற்றவன்மீது கொண்டிருந்த அச்சத்தினதும், பொறுமையிதும் பேறாகத் தம்முள் ஒருவனை அரசனாகத் தெரிந்தெடுப்பதை விடுத்து நாயக்கர்களையே மன்னர்களாகத் தெரிந்தெடுத்தனர். பிரதானிகள் தம்முள் கொண்ட பகைமையும், பொறாமையுமே அரசனின் பலமாயிற்று.

### கண்டி மன்னரின் அதிகாரங்கள்

அரசன் தனது இராச்சியத்தின் தலைவனும் முதல்வனும் என்ற முறையில், சகல அதிகாரங்களுக்கும் இருப்பிடமாக விளங்கினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 வயது...

பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஊரெழுவை சேர்ந்த ஸ்ரீ ரங்கநாதன் மதுமிதா (வயது- 16) என்ற பாடசாலை மாணவியே உயிரிழந்தவராவார்.

ஊரெழு கணேசா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மேற்படி மாணவிக்கு ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணி முதல் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் இதனை அடுத்து மறுநாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் இரத்த மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10,60)

## பாடசாலைகளின்...

தவணைக்கான முதற்கட்டப் பணிகள் இன்றுடன் நிறைவடையவுள்ளது.

அத்துடன் இம்மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை முதல் பாடசாலை தவணையின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகவுள்ளது.

மேலும் முஸ்லிம் பாடசாலைகளுக்கான முதல் பாடசாலை தவணையின் இரண்டாம் கட்டம் இம்மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7,10)

## கைதிகளுக்கு...

இதன்படி, 779 சிறைச்சாலை கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 34 (1) வது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7,10)

## குளியலறையில்...

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் பாலசிங்கம் உதயகுமார் (வயது-55) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் சுவிஸில் இருந்து நவாலி தெற்கு, மானிப்பாய் பகுதியில் உள்ள தாயாரின் வீட்டுக்கு வந்திருந்தார்.

இந்நிலையில் நேற்றுக் காலை குளியலறையில் குளிக்கச் சென்றவேளை கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம-7,10)

## சர்வதேச...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டிற்குள் தற்போது தேர்தல் சூடுபிடிக்க ஆரம்பிள்ளதுடன் பல தேர் தல்கள் தொடர்பாகவும் அரசியல் கட்சிகள் கவனம் செலுத்திவருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான பூரண அதிகாரம் மற்றும் பொறுப்பு தாங்கள் உட்பட தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது.

அதனால் அரசியல் அதிகாரத்தை பயன் படுத்திக் கொண்டு தேர்தல் திகதியை மாற்றியமைக்க யாருக்கும் இயலாது.

அதனால் வேட்புமனு தாக்கல் செய்யும் காலம் மற்றும் பிரசார காலம் தொடர்பாக நடைமுறைச் சாத்தியங்களை ஆராய்ந்து உரிய காலத்தில் நீங்கள் ஆணைக் குழுவினால் தேர்தல் திகதியை அறிவிக்கும் என்பதே எமது நம்பிக்கை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்கள் பலர் போட்டியிடும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் கடும் போட்டித்தன்மை காணப்படுவதால், வேட்பாளர்களின் செலவை வரையறுக்கும் சட்டத்தை முதல் தடவையாக செயற்படுத்த இருக்கிறது.

அதேபோன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களை மேம்படுத்துவதற்காக பிரதான ஊடகங்கள் உட்பட சமூகவலைத்தளங்களை பயன்படுத்த இடமிருக்கிறது. அதன் பிரகாரம் எதிர்வரும் தேர்தல் மிகவும் விறுவிறுப்பானதாக அமையும்.

அதனால், இம்முறை தேர்தலுக்காக சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு தாங்கள் உட்பட ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொள்கிறோம்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் தேர்தல் கண்காணிப்பில் கலந்துகொள்வது தேர்தலின் நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதற்கான சாதகமாகும்.

மேலும் தேர்தல் அறிவிப்பு செய்யும் திகதி தொடர்பில் அரசியலமைப்பின் பிரகாரம் எமக்கு சில தீர்மானங்களுக்கு வரமுடியும் என்றாலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இதற்காக தயாராவதற்கு போதுமான காலம் வழங்கும் வகையில் அவர்களுக்கு அழைப்பு விடுப்பது தொடர்பில் உங்களதும் ஆணைக்குழுவினதும் விரைவான கவனத்தை செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## பெர...

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் பலமான கட்சியாகவே தொடர்ந்தும் செயற்படுவோம். ரணில் விக்கிரமசிங்கவுடன் எவ்வளவு தூரம் அரசியல் பயணத்தை தொடர முடியுமோ அது வரையும் பயணிப்போம். ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பாக எமது கட்சி உறுப்பினர்கள் எவரேனும் கருத்து தெரிவிப்பார்களாயின் அது அவர்களது தனிப்பட்ட கருத்தாகும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் எழுந்துள்ள நெருக்கடி நிலையால் எமக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கட்சியில் இருந்து வெளியேறிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

அதேபோன்று புதிய கட்சியை உருவாக்கிய சந்தர்ப்பமும் உள்ளது. ஆனாலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை கட்டியெழுப்புவதற்கான உரிமை சந்திரிகாவிற்கு உள்ளது" இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.04.09
சீட்டிழுப்பு இலக்கம் 5445
T 7 4 5 3 5 3
அத சம்பத
T 5 3 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 0020
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1475
Z 15 28 56 76 Z
Double Chance 66650

மெகா பவர்
திகதி 09/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1793
J 03 14 25 74 80
Double Chance 12014

லக்கி 7 VIP
திகதி 2024.04.09
சீட்டிழுப்பு இலக்கம் 0271
K 7 9 5 3 4 8 K

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3687
சீட்டிழுப்பு திகதி 09.04.2024
V 38 55 57 69
V 31283
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.09
சீட்டிழுப்பு இலக்கம் 0754
மீனம் 19 31 46 61 மீனம்
81872 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
09.04.2024 வெற்றி வாரம் 153 வர்ணம் சிவப்பு
B 0 1 2 4 4 3
57237 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் 20,415,780.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2419 09.04.2024 செவ்வாய்
43 57 59 68 X
63865
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,091,420.00
DLB

சனிதா
2024.04.09 வெற்றி வாரம் 4580 வர்ணம் பச்சை
35 42 62 64 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,782,659.60
51727
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிறி
வெற்றி வாரம் 465
2024.04.09
வெற்றி இலக்கங்கள் 13 20 29
86327
ரூ 3,334,840/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4131 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.04.09 தினம் செவ்வாய்க்கிழமை
17 21 30 48 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,228,633.20
984989
DLB

கப்ருக
G 22 19 28 47 63
1595
496168
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 517,264,584.20
2024.04.09 செவ்வாய்
DLB

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2245
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 105,703,328/-
சீட்டிழுப்புத் திகதி : 2024.04.09
அட கோடீபதி ADA KOTIPATHI
20 45 67 68 M
599373
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 17 37 684 (395)

**CANADA VISA**

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.

021 222 5686
076 424 7111

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna. (293)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- மருதனார்மடம் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை


(412)

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389
077 986 5457


# மரண அறிவித்தல்

மலர்வு 01 - 02 - 1951



உதிர்வு 09 - 04 - 2024

## சிவசம்பு விக்னேஸ்வரன்

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும் துர்க்காபுரம், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு விக்னேஸ்வரன் அவர்கள் 09.04.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - பார்வதிஅம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரி (ஈசக்கா) அவர்களின் அன்புக் கணவரும் இராசலக்சுமி, அன்னலக்சுமி, பாக்கியலக்சுமி, சீனிவாசகம், பாலசுப்பிரமணியம், பேபிராசமலர்தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நாகராசா, காலஞ்சென்றவர்களான நாகேந்திரன், இந்திரகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் வைகுந்தன் அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை 10.04.2024 மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 166 9267
077 388 1062

(411)

தகவல்:
குடும்பத்தினர்

## தமிழ்...

மாகும் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். தமது மாதாந்த கேள்வி - பதில் அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில்,

சிங்களத் தலைவர்களை நான் அறிவேன். காரியம் ஆகும் வரையில் காலைப்பிடிப்பார்கள். காரியமானவுடன் கழுத்தைப் பிடிப்பார்கள். அவ்வாறானவர்களுக்கு எனது அறிவையும் நிபுணத்துவத்தையும் நேரத்தையும் செலவிடுவதால் எமது தமிழ்பேசும் மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை. இவ்வாறான சிந்தனையின் அடிப்படையிலேயே தமிழ் பேசும் பொதுவேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்ற வைக்க வேண்டும் என்று கூறி வருகின்றேன். சம்பந்தன் துரதிஷ்டவசமாகத் தனது சொந்தக் காரணங்களுக்காகத் தமிழ் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவதை எதிர்க்கின்றார். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வருங்காலம் பற்றி அவர் ஆழ்ந்து சிந்தித்தால், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி தேர்தலில் பங் பற்ற வைப்பதே உசிதமான செயல் என்று விளங்கும். சம்பந்தன் தற்பொழுதும் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்திலேயே வாழ்ந்து வருகின்றார். அரச பெரும்புள்ளிகளின் தயவிலேயே அவர் அங்கு வாழ்கின்றார். சிங்கள வேட்பாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய தமிழரின் வாக்குகள் சிதறிப் போவதை இதனால்தான் அவர் எதிர்க்கின்றார்.

தமிழர்களின் இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கூர்ந்து அவதானித்தாரானால் - தமிழரின் எதிர்காலம் பற்றி ஆழமாக சிந்திப்பாரானால் - தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதை அவர் மனமார வரவேற்க வேண்டும்.

தமிழ் பொதுவேட்பாளர் தகைமைகள் உடையவராக இருந்தால் பல நன்மைகளை தமிழ்மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பார்.

1.தமிழர்களின் அரசியல் பிரச்சினை இன்றுவரை தீரக்கப்படவில்லை என்பதையும் எமது பிரச்சினை என்ன என்பது பற்றியும் மக்களுக்கும் மற்றைய நாட்டவர்களுக்கும் அவர்களுக்குப் புரியும் மொழியில் சொல்லி வைக்கலாம்.

2. தமிழர்கள் எதைத் தீர்வாகப் பெற எத்தனிக்கிறார்கள் என்பது பற்றியும் அதற்கான காரணங்களையும் வெளிப்படையாக எடுத்துக் கூறலாம்.

3. தமிழ்ப் பேசும் மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டலாம்.

4.பேரம் பேசவரும் மற்றைய போட்டியாளர்களை எதைத் தருவீர்கள் என்று கேட்டு அவர்களை வெளிப்படையாக ஏற்க வைக்கலாம். இதற்கு ஏதேனும் ஒரு நாட்டின் இராஜதந்திரியை மத்தியஸ்தராக நிலைநிறுத்தி எழுத்தில் உடன்பாட்டைப் பெற்றபின் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிக்கலாம்.

5. பகிஷ்கரிப்பதால் எந்த நன்மையும் ஏற்படாது. அரச ஆதரவு சக்திகள் எங்கள் வாக்குகளையும் தமது தலைவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து விடுவார்கள். முன்னர் பகிஷ்கரித்தபடியால் பதவிக்கு வந்தவர்கள்தான் பகிஷ்கரிக்கக் கோரியவர்களை அழித்தார்கள். ஆயுதங்களை மௌனிக்கச் செய்தார்கள்.

6. இன்னுமொரு உபாயம் உள்ளது. தமிழர்கள் அனைவரையும் தமது வாக்குகளை தகுதியற்றதாக்கக் கோரலாம். ஆனால், அதிலும் அரச சார்பு சக்திகளின் நடவடிக்கைகள் எமக்கு தோல்வியையே நல்கும். என்னிடம் கேட்ட கேள்விக்கு மேலதிகமாகவே பதில் அளித்துள்ளேன். காரணம் எமது பிரச்சினை வேறு. மத்திய அரசின் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளின் பிரச்சினை வேறு. எம்மை பலமிழக்கச் செய்து, எமக்குப் பல இன்னல்களை விளைவிக்கும் மத்திய அரசுக்குத் துணைபோகாது, எமது மக்களுக்கான சேவையை ஆற்றுவதே எனது கடப்பாடு. அதனையே நான் செய்து வருகின்றேன் என்றுள்ளது.

(ம-7,10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0100)

076 825 7716 (ஆகாஸ்)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS (C-0102)

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0102)

**சிறிராம் ஜீவல்லர்ஸ்**



- யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத் தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
- 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 165 1729, 077 773 0567
021 222 8334 (C-0101)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.